**<u>செய்தி வெளியீடு</u>**

**செ.வெ. எண். 15** **நாள். 13.12.2017**

**எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, அச்சக உரிமையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களுடன் தேர்தல் விளம்பரங்களான துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் அச்சடிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையில், தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, அச்சக உரிமையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களுடன் தேர்தல் விளம்பரங்களான துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் அச்சடிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. பிரவீண் பி. நாயர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் திரு.குமார் பிரணவ், இ.வ.ப., திரு.பி.ஜி.கிருஷ்ணன், இ.வ.ப., திரு.ஷில் ஆஷீஸ், இ.வ.ப., ஆகியோர் முன்னிலையில் இன்று (13.12.2017) தண்டையார்பேட்டை, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால், எந்தவொரு விளம்பரமோ, சுவரொட்டிகள் மற்றும் பேனர்களோ அச்சிடுவதற்கு முன்பாக அனுமதி பெற வேண்டும். இதில் தேர்தல் தொடர்பான விளம்பரங்கள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் போன்றவற்றை அச்சடிக்கும் போது, இந்திய இறையாண்மைக்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிராகவும், ஜாதி, மத, இன போன்றவற்றின் ஒற்றுமையை குழைக்கும் வண்ணம் வாசகங்கள் அறிக்கையில் இடம்பெறக் கூடாது. தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான அறிக்கைகள், விளம்பரங்கள் போன்றவற்றை அச்சிடக்கூடாது. அச்சக உரிமையாளர்கள் அச்சிடும் விவரத்திற்கான நகலையும், அதற்குரிய சான்றுகளையும் அச்சிடப்பட்டவுடன் அல்லது அச்சிடப்பட்ட மூன்று தினங்களுக்குள் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரிவித்திட வேண்டும்.

தேர்தல் பணிகள் தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் கட்சியினை சார்ந்தவர்கள் அச்சடிக்கும் போது, உறுதிமொழி படிவத்தில் தெரிந்த இரண்டு நபர்களின் முன்னிலையில் கையொப்பமிட்டு அச்சக உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும். இதுகுறித்த விவரங்களை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும். மேலும், தேர்தல் தொடர்பாக அச்சடிக்கும்போது அவற்றில் வெளியிடுபவர், அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி எண்ணிக்கை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும். இது குறித்த விவரத்தினை அச்சக உரிமையாளர்கள் தாங்கள் சார்ந்த சங்கங்களுக்கும் தெரியப்படுத்திட வேண்டும். இது தொடர்பாக ஏற்கனவே தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் விதிகளை மீறி அச்சடிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் கண்டறியப்பட்டால் அச்சக உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அபராதம் மற்றும் குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த நாட்களில் விதிகளை மீறி அச்சடிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது, அவைகளின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அச்சக உரிமையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**